# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.903/2019 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-5/PW-3 <br> Name : மூவேந்தன் <br> Father's/Husband's Name : குமார் <br><br> Nationality : Indian | Village: <br> Age :28 <br> Taluk : <br><br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 04.09.2024**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமைக் காவலர் திருமதி. அபிராமி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது ஆடுதுறையில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2018ம் ஆண்டு ஒருநாள் நான் ஆடுதுறை மீரான்கனி மருத்துவமனை அருகே எனது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது திருவிடைமருதூர் போலிசார் என்னிடம் ஒரு கையொப்பம் வாங்கி கொண்டார்கள். எதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்று தெரியவில்லை. தற்போது நீதிமன்றத்தில்

காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்கள் என்னுடையதுதல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 07.02.2018 ம் தேதி மாலை சுமார் 4 மணியளவில் நான் சம்பவ இடத்தின் அருகே உள்ள டாக்ஸி ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த திருவிடைமருதூர் போலிசார் குற்ற எண் 24/2018 வழக்கு தொடர்பாக விசாரித்து வரைபடம் வரைந்து மகசர் தயார் செய்தார்கள் என்றும் அதில் நான் சாட்சியாக கையொப்பம் போட்டேன் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எதிரிகள் ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**<br>**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**<br>**திருவிடைமருதூர்.**

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC .903/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-1/PW- 2 | Village: | |
| Name | : செந்தில் | Age | :46 |
| Father's/Husband's Name | : கல்யாணம் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 04.09.2024**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமைக் காவலர் திருமதி. அபிராமி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது ஆடுதுறை அம்மன்கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் ஜவுளிக்கடையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 2018 ம் ஆண்டு ஆடுதுறை காளியம்மன்கோவில் அருகே செருப்பு கடை வைத்து தொழில் செய்து வந்தேன். ஆஜர் எதிரி அடிக்கடி எனது கடைக்கு வந்து செருப்பு வாங்கி செல்வார். அதற்கு பணம் கேட்டால் கொடுக்க மாட்டார். கடந்த 07.02.2018 ம் தேதி காலை சுமார் 10.30

மணியளவில் எதிரி  எனது கடைக்கு வந்து செருப்பு கேட்டார்.  அதற்கு நான் பணம் கொடுத்துவிட்டு வாங்கி செல்லுமாறு சொன்னேன்.  அதற்கு எதிரி என்னிடம் பிரச்சனை செய்து என்னை பார்த்து குச்சிகாரி மகனே தேவடியா மகனே என்று அசிங்கமாக திட்டினார். பின்னர் பக்கத்தில் இருந்த உருட்டு கட்டையை எடுத்து எனது இடது பக்க தலையில் அடித்துவிட்டார்.  அதனால் எனது இடது காதில் இருந்து ரத்தம் வந்தது.  பின்னர் எதிரி என்னை பார்த்து என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார். நான் உடனே திருவிடைமருதூர் காவல் நிலையம் சென்று புகார் அளித்துவிட்டு எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். அங்கு சுமார் 4, 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன்.  தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும்  புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு நான் கொடுத்தது தான். (**புகார் மனு  அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் என்னை விசாரித்தார்கள்..

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார்.  போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**